# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1885/44 - 2014 ඔක්තෝබර් මස 24 වැනි සිකුරාදා - 2014.10.24

*1885/44 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

மதுவரி அறிவித்தல் இல. 972

**மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) உள்நாட்டில் விநியோகித்தல் /இறக்குமதி மீதான மதுவரி தீர்வை**

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம் ) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், கீழ் குறிப்பிடப்படும் கட்டளையினை பிரகடனப்படுத்துகிறேன்.

2014, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிய 1883/7 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 967 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2014, ஒற்றோபர் 24.

**கட்டளை**

1. இதனகத்துக்குப் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பீடு செய்யப்பட்ட பொருட்கள் மீது அவற்றிற்கு நேரொத்த வகையில், அவ்வட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட விகிதத்திற்கு அமைவாக அட்டவணையின் III ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளதனைப் போன்று, 2014, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி முதல் பயன் வலுப்பெறும் வகையில் மதுவரியொன்று விதிக்கப்படுதல் வேண்டும் .

2. ஏதேனும் பிற அறிவித்தல்கள் எதுவும் முரண்படாத வகையில், அத்தகைய மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது வடிசாலையிலிருந்து, அல்லது மொத்த களஞ்சியசாலையிலிருந்து, அல்லது உள்ளூர் உற்பத்திசாலையிலிருந்து விடுவிக்கப்படும் போது இத்தீர்வைகள் செலுத்தப்படுதல் வேண்டும்.

***அட்டவணை***

| | நிரல் I<br>விடயம் | நிரல் II<br>மாதமொன்றிற்கு உள்ளூரில் விடுவிக்கப்படும்/இறக்குமதி செய்யப்படுகின்ற லீற்றர் அளவு | நிரல் III<br>தீர்வை விகிதம் (தொகை லீற்றர் ஒன்றுக்கு ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | உள்நாட்டில் விநியோகித்தல் | இறக்குமதி |
| 1. | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள் மற்றும் அரச திணைக்களங்களினால் பயன்படுத்தப்படுகின்ற மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) | 10,000 லீற்றர் வரை | விலக்களிப்பு | விலக்களிப்பு |
| | | வைத்திய வழங்கல் பிரிவு தொடர்பில் 20,000 லீற்றர் வரை | | |
| | | லீற்றர் 10,001 முதல் 20,000 வரை | ரூபா 500/= | ரூபா 600/= |
| | | லீற்றர் 20,000 க்கு மேல் | ரூபா 900/= | ரூபா 1,000/= |
| 2. | முடிவுப் பொருட்கள் , மதுவரித் தீர்வைக்கு உட்படாத, மருந்துப் பொருட்கள் மற்றும் கைத்தொழில் உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப்படும் மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) | லீற்றர் 500 வரை | விலக்களிப்பு | ரூபா 100/= |
| | | லீற்றர் 501 முதல் 10,000 வரை | ரூபா500/= | ரூபா 600/= |
| | | லீற்றர் 10,001 முதல் 20,000 வரை | ரூபா 600/= | ரூபா 700/= |
| | | 20,000 லீற்றருக்கு மேல் | ரூபா 1,000/= | ரூபா 1,100/= |
| 3. | முடிவுப் பொருட்கள் மதுவரித் தீர்வைக்கு உட்படாத ஏற்றுமதி உற்பத்திகளுக்காக பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்களை சுத்தப்படுத்துவதற்காக பயன்படும் மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) | 500 லீற்றர் வரை | விலக்களிப்பு | விலக்களிப்பு |
| | | லீற்றர் 501 முதல் 10,000 வரை | ரூபா 500/= | ரூபா 600/= |
| | | லீற்றர் 10,001 முதல் 20,000 வரை | ரூபா 600/= | ரூபா 700/= |
| | | 20,000 லீற்றருக்கு மேல் | ரூபா 1,000/= | ரூபா 1,100/= |
| 4. | சுத்திகரிக்கப்படாத ஈதைல் அற்ககோல் மதுசார வகைகள் (தொழில்நுட்ப மதுசாரம்/ பலம் குறைந்த மதுசாரம்) | ஒவ்வொரு லீற்றருக்கும் | ரூபா 300/= | ரூபா 1,000/= |
| 5. | மதுபான உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) | | ரூபா 100/= * (முழுமையான மதுசாரம் தலா லீற்றருக்கு) | ரூபா 100/= * முழுமையான மதுசாரம் தலா லீற்றருக்கு) |

* உள்நாட்டில் கொள்வனவின் பேரில்/இறக்குமதியின் பேரில் மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) இற்காக அறவிடப்படுகின்ற இத்தீர்வையானது, அவற்றினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்கள் பேரில் குறித்த மதுவரியினை செலுத்தும் போது மீளத்திருப்பிச் செலுத்தத்தக்க பிடிவரியொன்று அறவிடப்படும்.

*11 - 324/1*

## மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல் இல. 971

### மாவூறற் மதுபானம் மீதான மதுவரித் தீர்வை

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம் ) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2014, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி முதல் பயன் வலுப்பெறும் வகையில்,

(1) இலங்கையில், அனுமதி பெற்ற உற்பத்திச்சாலை எதனிலுமிருந்து உற்பத்தி செய்யப்பட்டு, அதன் சுட்டுத் துண்டில் சுத்த மதுசாரச் செறிவு ஐந்து சத வீதத்திற்குக் (5%) குறைந்ததெனக் குறிப்பிட்டு வெளியாகும்/உற்பத்தி செய்யப்படும் மாவூறற் மதுபானம் ஒவ்வொரு லீற்றருக்கும் நூற்றி ஐம்பது ரூபா (150.00 ரூபா) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்படல் வேண்டுமென்றும் ;

(2) இலங்கையிலுள்ள அனுமதிபெற்ற உற்பத்திச்சாலை எதனிலுமிருந்து உற்பத்தி செய்யப்பட்டு அதன் சுட்டுத் துண்டில் சுத்த மதுசாரச் செறிவின் ஐந்து வீதம் (5%) அல்லது அதற்குக் கூடுதலானதெனக் குறிப்பிட்டு வெளியாகும்/உற்பத்தி செய்யப்படும் மாவூறற் மதுபானம் ஒவ்வொரு லீற்றருக்கும் நூற்று எண்பத்து ஐந்து ரூபா (ரூபா 185.00) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்படல் வேண்டுமென்றும் ;

(3) அத்தகைய மதுபானம் அனுமதிபெற்ற உற்பத்திச்சாலை எதனிலுமிருந்து இலங்கையிலுள்ள எந்த இராஜதந்திர தூதரகத்தின் பாவனைக்காகவும் அல்லது எந்த வெளிநாட்டிற்கும் வழங்கப்படின், மேற்படி வழங்கிய மதுபானத்துக்கான கொடுப்பனவு அத்தூதரகத்தின் வெளிநாட்டுக் கணக்கிலிருந்து பெறப்படுமிடத்து, மேற்குறித்த தீர்வை விதிக்கப்படலாகாது அல்லது அறவிடப்படலாகாது எனவும் ; அத்துடன்,

(4) 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிய 1883/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 966 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும் ;

இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2014, ஒற்றோபர் 24.

11- 324/2

---

## மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல் இல. 970

### இலங்கையில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுசாரம் மீதான மதுவரித் தீர்வை

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம் ) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2014, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி முதல் பயன் வலுப்பெறும் வகையில்,

(1) இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற "வெளிநாட்டு" மதுசாரம் மீது அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு வடி நீர்மங்களின் செறிம லீற்றருக்கும் ஆயிரத்து எழுநூறு ரூபா (1,700.00) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்பட வேண்டும். ஆனாலும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள "வெளிநாட்டு" மதுசாரங்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் போது, அத்தொகை எவ்வளவாயினும், அவற்றின் மீது அத்தகைய தீர்வை விதிக்கப்படவோ அல்லது அறவிடப்படவோ கூடாது எனவும் ; அத்துடன்,

(2) 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிய 1883/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 965 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும்,

இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2014, ஒற்றோபர் 24.

11- 324/3

## மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல் இல. 969

**வெல்லப்பாகு, பனஞ்சாராயம், தென்னை மற்றும் பதனிடப்பட்ட சாராயம் மீதான மது வரி**

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம் ) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவினால் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2014, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி முதல் பயன் வலுப்பெறும் வகையில்.

(1) இலங்கையில், ஸ்தாபிக்கப்பட்டுள்ள உத்தரவுப் பத்திரம் பெற்ற உற்பத்தி நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் வெல்லப்பாகு (மொலாசியஸ்), பனஞ்சாராயம், தென்னை மற்றும் பதனிடப்பட்ட சாராயம் என்பவற்றின் மீது அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு வடி நீர்மங்களின் செறிம லீற்றருக்கும் ஆயிரத்து நாநூற்று எண்பத்தைந்து ரூபா (ரூபா 1,485.00) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்பட வேண்டும். ஆனாலும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாராயம் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும்போது, அத்தொகை எவ்வளவாயினும், அவற்றின் மீது அத்தகைய தீர்வை விதிக்கப்படவோ அல்லது அறவிடப்படவோ கூடாது எனவும் ; அத்துடன்,

(2) 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிய 1883/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 964 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும் பிரகடனப்படுத்துகிறேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2014, ஒற்றோபர் 24.

11- 324/4

---

## மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல் இல. 968

மதுசாரம் மீதான மது வரி

**(பனங்கள்ளு அல்லது ஏதேனும் காய்ச்சி வடித்தல் மூலம் தயாரிக்கப்பட்ட மதுபானம் தவிர்ந்தவை)**

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம் ) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவினால் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2014, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி முதல் பயன் வலுப்பெறும் வகையில்.

(1) பனை மரத்தின் இயற்கையான உற்பத்திப் பொருட்கள் அல்லது ஏதேனும் தாவரத்திலிருந்து காய்ச்சி வடித்தல் தவிர்ந்த செயன்முறை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட அற்ககோலின் 4 சதவீதத்திற்கு (4%) மேல் கனச் செறிவுள்ள (கள்ளு அல்லது வேறு தானியம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் மதுபானம் தவிர்ந்த) இலங்கையில் தயாரிக்கப்பட்ட மதுபானத்தின் மீது அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு வடி நீர்மங்களின் செறிம லீற்றருக்கும் ஆயிரத்து நூற்று இருபது ரூபா (ரூபா 1,120.00) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்பட வேண்டும். ஆனாலும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள மதுபானங்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும்போது, அத்தொகை எவ்வளவாயினும், அவற்றின் மீது அத்தகைய தீர்வை விதிக்கப்படவோ அல்லது அறவிடப்படவோ கூடாது எனவும் ; அத்துடன்,

(2) 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதிய 1778/41 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 952 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும்,

இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2014, ஒற்றோபர் 24.

11- 324/5

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.